ஸ்ரீ திரிபுரசுந்தரீசமேத ஸ்ரீ சந்திரமௌளீசுவராய நம:

# ஆர்ய தர்மம்.

சந்திரக்கிரஹண புண்ணியகாலத்தில் மூன்றுயாமத்திற்கு முந்தியே சாப்பிடாமலிருந்து கிரஹண ஸ்பர்சாதி காலங்களில் ஸ்நான தானாதிகளை செய்யவேண்டுமென சாஸ்திரத்தில் விதித்திருக்க, பட்டினி கிடக்கவும், தூக்கம் விழிக்கவும், யாரால் முடியுமென்று சிலர் குதர்க்கம் பேசுவார்கள். தர்மகாரியத்தில் பட்டினி கிடக்கவும் தூக்கம் விழிக்கவும் சக்தியில்லையெனச் சொல்லிக்கொள்ளுமிவர்கள் வேறு காரியத்திற்காக உண்ணாவிரதமிருக்கவும் உயிரிழக்கவும் துணிந்திடுவார்கள். குழந்தை முதல் கிழவன்வரை ஸ்திரீகளோடு ட்ராமாபார்க்க நாடகக்கொட்டகை சென்று இரவு முழுமையும் கண்கொட்டாமல் விழித்துக்கொண்டிருப்பார்கள். அங்கு காலிகள் செய்யும் கலவரத்தால் கஷ்டப்படுவதே கடமையென்றும் நினைப்பார்கள். அன்றியும் புண்ணிய காலத்தில் பணச்சிலவை வீண் சிலவு என்பார்கள். ட்ராமாவுக்காக பணத்தை திருணமாக நினைப்பார்கள். நல்லகாரியத்தில் சிலவிடும்போதுதான் பணத்தின் அருமையும் பெருமையும் ஞாபகத்திற்கு வருகிறது தார்மிக வேஷம் போட்டவர்களே தர்ம விஷயத்தில் தியாகம்செய்யத் தயங்குவார்களாகில் வேறெவர்தான் தரணியில் தானம் செய்யத்துணிவார். இவ்விதம் கலிமஹாராஜனது கோலாஹலத்திலும் சில புண்ணியவான்கள் நல்ல காரியத்தில் பொருளை விநியோகிப்பது போற்றத்தக்கதே. ஆயினும் தர்மபிராணனான நம்பாரதபூமியில் புண்ணிய வார்த்தைக்குப் பஞ்சம் நேரிட்டதேயென்று நினைக்காமலிருக்க முடியவில்லை. தர்மாசாரியர்கள் செய்யும் தத்வோபதேசத்தைக் கேழ்க்கவில்லையென்றால் எவர்சொல்லைத்தான் கேழ்க்கப்போகிறார்கள். இந்த சமயம்பார்த்து சிலர் வர்ணாச்ரமதர்மத்தையொழிப்பதே பெரியதர்மமெனப் புகட்டுகிறார்கள். அதுவும் நமது ஆரியச் சிறுவர்களிடத்தில் பலித்துவிடுகிறது. அதனால் சிறுவர்களையாவது சீர்படுத்திச் சதாசாரத்தைப் பரவச்செய்யலாமென நினைப்பதற்கும் வழியில்லாமலிருக்கிறது. இப்படியிருக்கையில் ராஜாபகதூர் கிருஷ்ணமாசாரியார் அவர்களது திருத்தச்சட்ட மசோதாவுக்கு ஸஹாயம்புரிய விரும்பியவர்கள் மனம் களைக்கிறார்கள், அப்படிக்களையாமல் பலத்த கிளர்ச்சிசெய்து ஸஹாயம்செய்ய எல்லோரும் முன்வருவார்களாக.

சுபம்.

பத்திராதிபர்.

# தற்போது செய்யவேண்டியது.

தேசாந்திரம் போகவேண்டியவன் அவ்விடத்தில் பசிதாகம் முதலியவைகளை விளக்கிக் கொள்வதற்காகவும் போக போக்யங்களை அனுபவிப்பதற்காகவும் போதுமான பொருளைத் தேடிக்கொண்டுபோனால்தான் கவலையன்னியில் களிப்புடன் காலங்கழிக்கலாம். பார்த்தமுகமெல்லாம் வேற்றுமுகமாக இருக்குமிடம் போய் புதிதாக என்ன செய்யமுடியும். அதிலும் போகவேண்டிய இடம் பெருத்த ராஜதானியாயிருந்தால் பலர் புகழத்தக்கப் பட்டதாரியாயில்லாதவனைப் பிரவேசிக்கவிடமாட்டார்கள். உதாரணமாக பார்லிமெண்டு மஹாஸபையில் ஒரு பாமரன்போய்ப்பேச விரும்புவானாகில் அதற்குச் சம்மதி கொடுப்பார்களா! கொடுக்கவே மாட்டார்கள். அதுபோல் இவ்வுலகில் மானிடப்பிறவியை அடைந்தவன் தனக்கு கிடைத்த சரீரத்தோடு சாசுவதமாயிருக்க முடியாதென்பது யாவரும் அறிந்தவிஷயமே. அத்தகைய ஊன உடல் நரை திரைகளாலோ மற்றுமுள்ள மீளாப்பிணிகளாலோ அழிந்துபோகும் தருணத்தில் அதைவிட்டுக் கிளம்பிய ஜீவன் வேறிடம் போகவேண்டியதவசியமென ஆஸ்திகர்களின் கொள்கை. இதை நாஸ்திகர் நம்பாவிடினும் பின்னிட்டுப் பாபலோகத்தில் பரிதவிப்பார்கள் என்பதே சாஸ்திரஸித்தாந்தம். ஆகவே சரீரம் போனபின் போகவேண்டிய இடம் ஒன்றிருப்பதாகவும் சாஸ்திரங்கள் வாயிலாகத் தெரிகிறது. ஆகவே அங்கு போகவேண்டியவன் அவ்விடத்திற்கு வேண்டியவைகளை இவ்விடத்திலேயே ஸம்பாதித்துக்கொண்டு போனாற்றான் அங்கு அதைச்சில வழித்துக்கொண்டு சுகமாயிருக்கலாம். அப்படி ஸம்பாதித்துக் கொள்ளாதவனை அங்கு போக அவ்வுலகத்தார் ஸம்மதிப்பதில்லை. ஆனால் யமலோகம் சென்று யாதனைகளை அனுபவிப்பான். பர

லோகம் சென்று சுகப்படுவதற்காக இங்கு தேடிக்கொள்ளவேண்டிய வஸ்து தர்மமேயாகும். அப்படித் தர்மத்தைத் தேடிக்கொள்ளாதவனை மேலுலகத்தார் அங்குவர சம்மதிப்பதில்லை. ஆகவே அதற்கு முக்கியகாரணமான கர்மயோகமே கண்டவர் கொள்கையால் கலங்கிக்கிடக்க அதை நீக்கித்தெளிவுறச் செய்யவேண்டிய தருணத்தில் மூளையிலிரங்காத மூல தத்துவ விசாரத்தைக் கடைவீதிக் கதையாக இழுத்துவிட்டுக் கொண்டு காலங்கழிப்பதற்கு இது சமயமல்ல. வர்ணாச்ரம தர்மத்திற்கே முடிவுகாலம்போல் நேர்ந்த இச்சமயத்தில் அதை நிலைநாட்டுவதே ஸகல ஆஸ்திகர்களும் சேர்ந்து செய்யவேண்டிய காரியம். உண்மையான பக்தியோ தீவ்ரமான வைராக்கியமோ, மற்றுமுள்ள விசாரஸாதனம் எதுவோ, அந்த நிலைக்கு வருவதற்கும் கர்மயோகமே காரணம். அந்த நிலைவந்த பிறகு பாக்யமுள்ளவன் தத்வவிசாரத்தில் தலையிடட்டும். அது வரை யாவரும் கர்மயோகத்தையே ஸ்தாபித்து அதைச் சரிவர அனுஷ்டித்து அதன்மூலம்பாரம்பரையாய்க்கிடைக்கும் புருஷார்த்தங்களை அடைவார்களாக. சுபம்

பத்திராதிபர்.

---

# பெரியோர்களுக்கு விண்ணப்பம்.

(236-வது பக்கத்தொடர்ச்சி)

அனாதி ஸித்தமான இவ்வித் துவிதப் பிரபஞ்சத்தில் மேடு பள்ளமெனத் தெரிந்துகொண்டு கண்ணுள்ளவன் நடப்பதுபோல் அக்கண்கொடுத்து நன்மைதீமையைத் தெரிந்துகொண்டு இருக்கிறவரை நல்வழி நடப்பதால் ஏற்படும் நன்மையையும் இறந்தபின் செல்லவேண்டிய பல உலகங்களின் ஸ்வரூபத்தையும் விளக்கவே வேதசாஸ்திரங்கள் ஏற்பட்டன. ஒருவன் வேதசாஸ்திரம் கற்று அதன்படி நடப்பானேயாயின் அவன் இம்மையில்சுகத்தையும் மறுமையில் புண்ணிய லோகங்களையும் அடைவான். ஆனால் அங்கு புண்ணிய கன்மம் குறைந்ததும் மறுபடி இவ்வுலகம் வருவான். பிறகு அங்குபோவான் என்பதையும் நம் சரித்திரம் முறையிடுகிறது. இவ்விதமே ஒருவன் புண்யத்தைச்செய்து கொண்டு இகசுகம் பரசுகம் பெறுவதும் அவ்விதமே பாபகன்மத்

தால் இரண்டிடத்திலும் துன்பத்தையடைவது சகஜம் என்று வேதசாஸ்திரம் வெளியிட்டால் அதுபோதாது. ஏனெனில் யாவருக்கும் சுகம் வேண்டுமென்றிருக்கிறதேதவிர துக்கத்தைவேண்டுபவரில்லை. எப்போதும் வழிநடக்கும் யாத்ரிகன் வண்டியேறி செல்பவனைக்கண்டால் அவன்போல் வண்டியேறிச்செல்ல பணமில்லையே என்றும் அவன் தனக்கு மேலாய் மோட்டார் ஸவாரி செய்பவனைப்பார்த்து அது தனக்கில்லையே என்பதும் ரயிலில் நெருக்கடிப்பட்டுச் செல்பவன் 1-வது வகுப்பு வண்டியிலிருப்பவனையும் அவன் ஸ்பெஷல் வண்டியில் சுகமாய்ப் பரிவாரங்களால் உபசரிக்கப்பெற்றுச்செல்லும் கவர்னர் முதலியவர்களையும்கண்டு தனக்கது இல்லையே என்றெண்ணுகிறார்கள். இனி அவ்விதம் சுகமாய்ச்செல்பவருக்கு உண்மையாய் சுகம் உண்டோவென்று கவனித்தால் அவர்களுக்குமில்லை. அவர்களுக்கும் உடம்பு அசௌகர்யமேற்படுகிறது. இன்னதேதியில் புறப்படுகிறதென்று நிச்சயம் செய்திருந்தும் உடம்பு அசௌகர்யத்தால் வேறுதேதியைக் குறிப்பிட்டு விடுகிறான். அவனிடம் நேரில் விசாரித்தால் எப்போதும் இவ்விதம் ரயிலில்போவது உடம்புக்காகிறதில்லை. இந்த கஷ்டம் எப்போதுதிருமோவென்பான். ஆகவே இருந்தவிடத்திலிருப்பதுதான் சுகமேயொழிய அலைவதில் சுகமே இல்லையென்பதை யாவருமேற்பார். இதுபோலவே இவ்வுலகினின்றும் பரலோகம்போவதும் அங்கிருந்து இங்குவருவதும்,தான் இயற்கையென்று வேதம் சொன்னதென்றால் அதுபோதாது. அவனும் தன்னிடத்தில்சுகமாய் உட்காரத்தான்விரும்புவான், அதற்குவழி வேதத்திற்கூறப்படவில்லையோவென்றால் வேதம் அதைத்தான் அந்தரங்கமாய்கூறியிருக்கிறது. ஸ்வர்க்கம் பிரமலோகம் வைகுண்டம் கைலாசம் என்ற உலகங்களையும் அதன் அதிபர்களையும் அவர்களுக்கும் நமக்குமுள்ள பற்றுதலையும் விரிவாய்க்கூறும் வேதம் அவைகளைப் பொதுவாய் எல்லாம் நல்லதுதான். எந்தலோகத்தை அடைந்தாலும் சுகம்தான். அததன்வழி இவ்விதமென்று விரித்து அதுடன் ஒழியாமல் பரமரகஸ்யமாய் இதுவெல்லாம் அழியக்கூடியவைதான். ஏனெனில் பெயர் ரூபம் உள்ளவை அழிந்தே தீரவேண்டியதுதானே. கர்மாவால் சம்பாதிக்கப்பட்டதற்கும் அழிவை நாம் கண்டிருக்கிறோமேயென்றும்கூறி அழியாப் பொருள் ஒன்றுதானென்று மறைபொருளாய் வைத்திருக்கி

றது. இதுகொண்டேநம் வேதத்தை மறை என்றும் அழைக்க லானோம். இத்தகைய மறைபொருளின் விளக்கத்தை எடுத்துக் கூறவந்தது முதலில் இவ்வுலகில் நமது பரமாசார்யார் ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்யாரவர்களென்பதை ஒப்பாதவர் உலகிலுளரோ, இவரது ஸித்தாந்தம் இதுகாறும் யாவராலுமழிக்கமுடியவில்லை. முக்காலத்திலும் முடியாதென்றே கூறுவார்கள். ஆஸ்திகர்கள் துக்கத்தையும் சுகத்தையுமனுபவித்து சக்கிரம்போல் சுழலும் ஸ்வபாவமுள்ள ஸம்ஸாரிகளைப் பார்த்து இது உனது ஸ்வபாவ மல்ல நீ சுகத்தையே இணையின்றி அனுபவித்து சுகரூபியாய் இருப்பதே உன் ஸ்வபாவம். வேதத்தில் கன்மபாகத்தைக்கூறி யிருப்பது சித்தசுத்திக்குமட்டிலும், அது மோக்ஷசுகத்தை அளிக்கவல்லதல்ல. ஆனால் நீ அத்வைதானந்தம் அனுபவிக்கும்பக்குவம்வருமளவும் நீ த்வைதப் பிரபஞ்சத்தில் கன்மபாவமானவேதத்தின் ஆணையில் கட்டுப்பட்டிருக்கவேண்டும். நீ த்வைதியாய்த்தானிருக்கவேண்டும் என்று வற்புறுத்துகின்றார். ஆதல்பற்றியே வ்யாவஹாரிகதசை என்றும்பாரமார்த்திகதசையென்றும்தொகுத்துரைத்தார். வ்யவகார தசையில் நாமிருக்கும்வரை பாரமார்த்திக தசை வாராதாதல்பற்றி ஞானிகளுக்குக்கூறிய தர்மம் நமக்கேற்காது. என்று த்வைத நிலையை வற்புறுத்தினார்கள். சாந்தோக்கியம் 2-வது அத்தியாயம் 13-வது கண்டம் முதல்மந்திரத்திலும்

कर्मविधीनामप्राण्यप्रसङ्ग इति चेन्न अनुपमर्दितभेदप्रत्ययवत्पुरुषविषये प्रामाण्योपपत्तेः स्वप्नादिप्रत्ययइव प्राक् प्रबोधात् ।

இவ்விதம் கன்மத்தினால் மோக்ஷமில்லையாகில் கர்மத்தை விதிக்கும்வேதவாக்கியங்கள் பிரமாணமற்றவைகளோவென ஆசங்கையெழ, அதல்ல. பேதபுத்தி விலகாத புருஷர்கள் விஷயத்தில் அவ்விதிவாக்கியங்கள் உபயோகப்படும். ஸ்வப்னம் காண்கிறவனுக்கு விழிப்பு ஏற்படுகிறவரையில் அதில்பிரமாணபுத்திபோலென்றார். ஆகவே த்வைதபுத்தியுள்ளவனுக்கு அவைகளென்றாயிற்று. இவ்விதம் பரமார்த்த தசையின் ரகஸ்யத்தை வெளியிடுமிடத்தில் சுருதியுக்தி அனுபவங்களால் துவைதத்தைக் கண்டிப்பதையே முதன்மையாய்க் கொண்டார் நம் ஆசார்யர். ஏனெனில் இரண்டென்றால்தான் பயம் மோகம்முதலியன உண்டாகும், இரண்டில்

லயென்றுல்தானே சுகமுண்டாகும். இதை நம் அனுபவத்திலும் காணலாம். காட்டில் யாத்திரைபோன இருவருள் ஒருவன் பணம்கொண்டுபோகிறுன். மற்றொருவன் சும்மாபோகிறுன். நடுவழியில் சூரியன் அஸ்தமித்தான். பணமுள்ளவன் அடியெடுத்துவைக்க பயப்படுகிறுன். மற்றவனுக்கு அது இல்லை ஏன் இவன் நினைப்புக்கும் அவன்நினைப்புக்கும் வித்தியாஸம். பணமுள்ளவன் ஐயோ திருடன் வருவானே நம்பணத்தைக் கவர்ந்துகொண்டு நம்மையும் நையப்புடைத்துப்போடுவானே என்செய்வேனென்று, இன்னொருவனுக்கு அதில்லை. அவன் இவ்விதம் கூறுவான். காட்டில் திருடன் இருப்பானே அவன் பிடித்துக்கொண்டால் என்னசெய்வாய் என்றுல் என்னிடத்தில் அவன் வரமாட்டான். அவனைப்போலவேதான் நானும். முடிப்பு இருந்தால்தான் அடிப்பான் என்பான். ஆகவே பந்தமில்லாத இவன் நம்மைப்போல்தான் அவனும் என்று நினைப்பதிலேயே அடியில்லாமல் சுகமாய்ப்போகிறுன். அடிக்கவரும் சத்துருவைப்பார்த்து என்னை அடியாதே நீயும் நானும் இனி ஒன்றுதானென்றுல் சத்துருத்தன்மை போய்விடுகிறது. ஆகவே உனக்கும் எனக்கும் பேதமில்லை. இவ்விதமே எப்போதுமிருப்போமென்றும் ஒத்துப்போகிறுர்கள். இக்யாதிபல வழிகளாலும் ஒன்றுதானென்று சொல்வதில்தான் சுகம் அளவற்றது. இரண்டென்பது அனர்த்தம் என்று பிரத்தியக்ஷானுபவங்களாலும் பிரதிதினமும் நாம் சுஷுப்தியில் ஒப்பற்றசுகத்தை அனுபவித்து நிகரற்றசுகமென்று ஸ்வரூபத்தை விளக்கமுடியாமல் யாரும் ஒப்புக்கொள்வதாலும் இவ்வத்வைதத்தை நம் பரமாசார்யாள் சிரமப்பட்டு வேதஸமுத்திரத்திலிருந்து நவநீதத்தைப்போல் திரட்டி வைத்தார்கள். இவர்கள் அவதரிக்காவிடில் இவ்வுயர்ந்த அமுதத்தை யார் எடுப்பார்கள். இதனுல் த்வைதபுத்தி இயற்கையான அஞ்ஞானத்தால் விலக்கத்தக்கதாய் இருக்க த்வைதம் ஸத்தியமென்று விளக்கவேதம் வரவேண்டாமென்பதை

प्रत्यक्षाद्यनवगतं श्रुत्या प्रतिपादनीयमद्वैतम् ।
द्वैतं न प्रतिपाद्यं तस्य स्वत एव लोकसिद्धत्वात् ॥

பிரத்தியக்ஷம் முதலிய பிரமாணங்களால் அத்வைதம் அறிய முடியாமையால் வேதம்தான் அதைவெளியிட வேண்டியதா

யிற்று. த்வைதத்தை வேதம் வெளியிடவேண்டாம். ஏன் அது இயற்கையில் நிலைபெற்றிருக்கிறதென்றார். ஆகவே இனி நான் பிரகிருதத்தை ஆரம்பிக்கிறேன்.

பெரியோர்களே! உங்கள் முன்னிலையில் ஓர் விண்ணப்பமென்று விண்ணப்பித்துக்கொண்டு எதையோ கூறினையே என்று யோசிக்கவேண்டாம். இனி விக்ஞாபனம் செய்கிறேன் தயைகூர்ந்து கவனியுங்கள்.

அத்வைதம் அவைதிகம் என்று பறைசாற்றின உத்தராதிமடம் த்வைதாசார்யாரிடத்தில் மேலான தங்களுக்கு கோபம் வேண்டாம். அவர்கள் தத்வவிசாரம் செய்வதாய்க்கூறுகிறார்கள். அத்வைதம் அவைதிகமென்று ஸித்தாந்தம் செய்வதுதான் அவர்களது தத்வவிசாரத்தின் முடிவு. ஏனெனில் த்வைதம்தான் ஸத்யமென்றால் அதற்கு எதிரி அத்வைதம்தானே. த்வைதம் ஸத்தியமென்பதைச் சொல்லவும் வேண்டுமோ? காட்டு மிருண்டியாய் இருப்பவர்களைப்பார்த்து நீயும் நானும் ஒன்று, நீயும் ஈசனும் ஒன்று. நீயும் இந்த மாமும் ஒன்று. என்றெல்லாம் கேட்டால் அவன் நம்மை அடிக்கவந்துவிடுவான். என்ன மாமென்கிறீரா? ஈசனும் நானும் ஒன்றாகமுடியுமா? நீயும் நானும் தனித்தனி நிற்கும்போது எப்படி ஒன்றாக முடியுமென்றுதான் கூறுவானேயொழிய அசந்திமறதியாலாவது ஒன்றுதானென்றாவது சொல்வானா சொல்லவேமாட்டான். ஆகவே இத்தைய த்வைதத்தை நிலைநிறுத்த ஒருவர்வரவேண்டாமெனினும் இதை ஒப்புக்கொண்டு அத்தகையோர் இன்னும் கீழே போகாமல் நற்கதி பெரும்பொருட்டுநற்சன்மமார்க்கம் உபதேசிப்பதற்காக த்வைதாசார்யர் நமது ஆசார்யாவர்களின் காலத்திற்கு மிகப்பிந்தி அவதரித்தாரென்கிறார்கள். அப்பரம்பரை ஆசார்யர் இப்போது கூறியவார்த்தை வெளிப்படவந்தது நியாயமில்லை என்பதைமட்டிலும்கூறி இனி அவ்விதம் சொல்வது அழகல்லவென்று ரைப்பதோடு நில்லாமல் அவர்களிடம்போய் வாதம்புரிந்து நம் அத்வைதத்தை வைதிகமென்று ஸ்தாபிப்போமென்று சமீபத்தில் கும்பகோணத்தில் அவ்வாசாரியரிடம் நம் பெரியார்கள்போய் இருவருக்கும் வ்யவகாரம் ஏற்பட்டு மணக்கசப்பால் அத்வைதிகள் வெளியேகினரென்று 27—3—31 மித்திரன்மூலம் பார்த்து என்மனது மிகவும் துக்கத்தில் ஆழ்ந்ததால் இது எழுதலானேன். வியாவகாரிக

திசையை அஸத்நியமென்று கொண்டிருக்கும் நசம் அதையே பாமார்த்தமென்று ஒப்புக்கொண்டிருப்பவரிடம்போய் வாதாடப் போகுதலழகோ? அத்வைதம் வைதிகம்தான் என்று அவர்சொன் ணல்தான் வசிஷ்டர் வாக்கால் விசுவாமித்திர பிர்மரிஷி என்றது போல் உத்தராதிமடம் ஆசார்யால் அத்வைதமதம் வைதிகஸ்திதி யையடையுமோ? ஒரு மதத்தை ஒருவர் நிந்தித்தால் அது சட்ட விரோதமென்றிருக்கிறபடி வழக்குத் தொடருவோமென்றால் நம் மதத்திற்கு அப்புறம் ஆயுள் மிஞ்சுமோ? ஒருவர் மதத்தை ஒருவர் இகழக்கூடாதென்பதை நன்கறிந்திருந்தும் அவ்வாசார்யார் இவ் விதம் வெளிப்படையாய்க் கூறியது சரியாகுமாவென்று சற்று நேசம் அப்பீடத்தையும் பரம்பரையையும் தமது காரியத்தையும் சேர்த்து ஆலோசித்தால் இவ்விதம் வெளிப்படையாய்க் கூறியது அவைதிகம் அலௌகிகம் என்று தெரிந்துகொள்ளலாம், இவ்வி தம் அவர்களல்லாது வேறொரு கிருஹஸ்த நிலையுள்ளோர் கூறி யிருந்தால்

विद्यामदो धनमदस्तृतीयोऽभिजनो मदः ।
एते मदामदांधानां ................... ॥

வித்தையின் கர்வம் பணத்தின் மமதை ஆள்கட்டின்மதம் என் றெல்லாம்கூறி அவர்களுடன் வாதுபுரிய கிளம்பலாம். இவர் களோ அகற்றவர்கள் एतएवसतान्दमा: இவைகளே சாதுக்க ளுக்கு அடங்குவதற்குக்காரணமானவை என்றபடி இவர்களிடத் தில் வாதமேவேண்டாம். இனியும் நம் பெரியோர்கள் அவ்வி தம் வாதத்திற்குப் போகாமல் நின்றால் அவர்களே அவ்வசனம் தவறுதலாலேற்பட்டதென்றே கொள்வார்கள். இல்லையேல் அத்வைதமதம் அவர்கள் வாக்கால் அவைதிகமாய்விடாதென் றும் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

M. N. சுப்பிரமணியசாஸ்திரி.

---

## அத்வைத மதமும் வைதிகமும்.

முதலில் அபௌருஷேயங்களாய் அதனாலேயே பிரமாண மூர்த்தன்யங்களாய் விளங்கும் சுருதிகளாலும் அவற்றின் உபப் பிரம்மணங்களாகியஸ்மிருதி புராணேதிஹாஸாகமங்களாலும்பரம

தாத்பர்யத்துடன் பிரிதி பாதிக்கப்படுவதும், அவற்றின் பரமதாத்பர்யாபிஜ்ஞர்களான ஸ்ரீ வேதவியாஸ மஹாமுனிகள், கௌடபாதாசார்யாள், ஸ்ரீ சங்கரபகவத்பாதாள், ஸுரேசுவராசார்யாள் பத்மபாதாசார்யாள், வாசஸ்பதிமிச்ராள், விவரணாசார்யாள், அமலானந்த ஸரஸ்வதீ, ஸ்ரீ ஹர்ஷமிச்ராள், வித்யாரண்யாள், அப்பய்யதீக்ஷிதேந்திராள், மதுஸூதன ஸரஸ்வதீ, பிரமானந்த ஸரஸ்வதீ, தியாகராஜ தீக்ஷிதேந்திராள், முதலிய மஹாத்மாக்களால் ஸூத்திரம், காரிகை பாஷ்யம், வார்த்திகம், டீகை, வியாக்கியானம் முதலிய கிரந்தங்களினால் விசேஷமாய் ஆக்ஷேப ஸமாதானங்களுடன் சுருதியுக்தி அனுபவங்களினால் ஸ்தாபிக்கப்பட்டதும் ஆஸேது ஹிமாசலம் அகண்டிதபிரசாரத்துடன் கூடியதும் வாசாமகோசரமான வைபவம் பொருந்தியதும் அனாதிகால ஸித்தமும் அதிதுருஹ விஷயகர்பிதமும், அகிலலோகமாதாவாகிய ஸ்ரீ மஹா திரிபுரஸுந்தரியென்னும் மஹா சக்தியுடன் ஸகலஜகத் ஸிருஷ்டி ஸ்திதிஸம்ஹாரதிரோபாவாநுக்ரஹரூப பஞ்சகிருத்தியம் புரியும் ஸ்ரீ சந்திரமௌளீசுவரனுடைய பரமானுக்ரஹத்தால் மாத்திரம் நிர்மலமாகிய சித்த தர்ப்பணத்தில் (மனதாகிய கண்ணாடியில்) பிரகாசிப்பதும் ஸர்வதர்சனசிரோரத்னமுமாகிய அத்வைதமதம் அவைதிகமா? வைதிகமா? என்று ஓர் விப்பிரதிபத்தி கிளம்பி இருக்கின்றது.

கலிமஹாராஜன் ஸாம்ராஜ்யம்நடத்தும் இக்காலத்தில் பிராம்மணர்கள், அவர்களின் சிறந்த தனமாகிய வேதம், அதன் அவாந்தரதாத்பர்ய விஷயமாகிய தர்மம், என்னும் ஸகல ஜகத்க்ஷேம மூலகாரணங்களாகிய மூன்று வஸ்துக்களும் ஆதரிப்பவர்களில்லாததினால் இருக்குமிடம் தெரியாமல் கிலானியை அடைந்திருக்கும் பொழுது பிராம்மணர்களின் பரம தனமாகிய வேதத்தின் பரம தாத்பர்ய விஷயமான அத்வைதமதம் இவ்விதவிப்ரதிபத்திக்கு இடமாய் அனாதரவிற்கு விஷயமாய் இருப்பது கலிகோலாஹலத்திற்கு அனுகுணமே.

இவ்வித வாசாமகோசர வைபவம் வாய்ந்த அத்வைதமதம் வைதிகம் என்று அதை நாம் பூஷிக்கவோ, அவைதிகம் என்று அதைநாம் தூஷிக்கவோ கிஞ்சித்ஜ்ஞர்களாய், அதனாலேயே நாம் எல்லாமறிந்தோம் என்னும் அஹங்காரமுடையவர்களாய், ஆழ்லாக்ரம் சுருதிஸ்மிருதி புராணேதிஹாஸாகமங்களைப் பார்க்கா

தவர்களாய், துவைதாத்வைத பரங்களான இரண்டொரு வாக்யங்களைக்கண்டமாத்திரத்தில் இது வைதிகம் இது அவைதிகம் என்று சொல்லத்துணிந்தவர்களாய்ப் பிறவிக் குருடர்கள் யானையின் ஒவ்வொரு அவயவங்களையே கையால் தொட்டுப்பார்த்து அதைக்கொண்டே யானையின் ஸம்பூர்ண ஸ்வரூபம் இவ்வளவுதானென்று நிச்சயம் செய்வதுபோல் நமக்குத்தெரிந்த சில சில வாக்யங்களைக்கொண்டே மதஸ்தாபனத்திற்குப் புறப்படுகிறவர்களாய் ஸகலதோஷ நிதிகளாயுள்ள நமக்கு அதிகாரமேயில்லை.

कुत्स्यास्स्युः कुपरीक्षकैर्न मणयो यैरर्घतः पातिताः।

"ரத்ன தத்துவசாஸ்திர பரிஜ்ஞானமில்லாத குத்ஸித பரீக்ஷகர்களால் குறைந்த விலையுள்ளதாகக் கருதப்பட்ட விலையில்லா மாணிக்யங்கள் குறைந்தவிலையுள்ளதாயாகமாட்டாது" என்றுவாக்யதீபம் என்னும்பிரஸித்த கிரந்தகர்த்தாவாய் பரமாத்வைதிசிகாமணிகளாய்விளங்கும் பர்திருஹரி அருளிய ஸுபாஷிதத்தை அனுஸரித்து நமது தூஷணத்தினால் அத்வைதமதத்திற்குக்குறைவு கிடையாது. விலையில்லாமாணிக்கத்தை விலை குறைத்துச் சொன்னவன்போல் தூஷிக்கின்ற நமக்கே கிஞ்சித்ஜ்ஞத்துவப் பிரகடன ரூபமாகிய குறைவு.

ஸகலவேத விபாக கர்த்தாவாய் ஸகலஜ்ஞான நிதியாய் விளங்கும் ஸர்வேசுவராவதார பூத வேதவியாஸ மஹாமுனிகளை "वेदव्यासस्स इह दश यो वेद वेदाक्षराणि" எவன் வேதத்தின் பத்து அக்ஷரங்களைத் தெரிந்தவனோ அவனே இக்கலியில் வேதவியாஸர்" என்று அரசாணிபால் வேங்கடாத்வரி கூறியவாறுள்ள யோக்கியதையையுடைய கலியுக வேதவியாஸர் ஸ்தோத்ரஞ்செய்தால் அது எங்ஙனம் வேதவியாஸ பகவானுடைய பெருமைக்குக் குறைவோ அங்ஙனம் அத்வைதமதத்தை அதன் பெருமைதெரியாதவர்களும் ஸ்தோத்திரத்திலும் அதிகாரமில்லாதவர்களுமான நாம் தூஷிப்பது அவ்வத்வைத மதத்தின் பெருமைக்கே குறைவேயாகும்.

ஆனாலும் தற்காலம் துவைத விசிஷ்டாதுவைத மதஸ்தர்கள் ஆபாலவிருத்தம் எவ்விதம் தன் மதம் இன்னதென்று பரிஜ்ஞானமும் தனது ஆசார்ய பக்தியும் உள்ளவர்களாயிருக்கிறார்களோ அவ்விதம் தன்மதம் அத்வைதமதமென்று கூடத்தெரியாதவர்

களும் அதனாலே விபூதி தரித்தால் சிவமதம், கோபி தரித்தால் விஷ்ணுமதம் என்று பத்திரங்களில் எழுதுபவர்களும் தமது ஆசார்யப்பிரபாவம் தெரியாதவர்களுமாயுள்ள அத்வைத மதஸ்தர்களாகிய சிலருக்கு "यक्षानुरूपोबलि:" "தைவத்திற்குத் தகுந்த பூஜை" என்கிற நியாயப்படி எம்போலொத்த கிஞ்சிஜ்ஞர் களும் அத்வைதமதம் வைதிகமென்று அதைப் பூஷிக்கவேண்டி யது காலதோஷத்தால் அமைந்துள்ளது பொறுத்தமே.

அதனால் நான் ஸ்ரீ சங்கரபகவத்பாதாளின் திவ்ய சரணகம லங்களை ஹிருதயத்தில் தியானித்துக்கொண்டு எனது சிறிய புத் திக்கு எட்டியவரையில் அத்வைதமதம் வைதிகம் என்னும் விஷ யத்தை அதற்கு வேண்டிய விஸ்தாரமான பூர்வ பீடிகையுடன் எழுதலாமென்று துணிந்தேன்.

உலகத்தில் ஆப்பிர்மஸ்தம்ப பர்யந்தமாயுள்ள ஸமஸ்தபிராணி களும் सुखंमेभूयात् दु खंमेमाऽऽयात् சுகம் எனக்கு உண்டாகவேண் டும். துக்கம் எனக்கு ஒருபொழுதும் உண்டாகக் கூடாதுஎன்று விரும்புகின்றன என்பது யாவருமறிந்த விஷயம். இக்கருத் தையே

इहजगति हि सर्वएत्र जन्तुर्निरतिशयं सुखमुत्तमं ममास्तु ।
उपरमतु तथोपघातरूपं विषयजदु:खमिति स्पृहां करोति ॥

"இவ்வுலகில் ஸமஸ்மதான ஜந்துவும்எனக்குஉப்புயர்வில்லாதசுகம் ஏற்படட்டும் விஷயங்களினால் உண்டாகும் கிலேச ரூபமான துக்கம் விலகட்டும் என்று ஆசைப்படுகின்றது" என்றுஸங்க்ஷேப சாரீரகத்தில் ஸர்வஜ்ஞாத்ம முனிகளும் விளக்கியுள்ளார்கள். ஆகையால் சுகம் துக்காபாவம் (துக்கமில்லாமை) ஆகிய இரண் டுமே புருஷார்த்தங்களாம், புருஷர்களால் ஆசைப்படக்கூடிய விஷயம்.

இவ்விரண்டினுள் சுகம் முக்கிய புருஷார்த்தம். துக்காபா வம் கௌண புருஷார்த்தம். முக்யபுருஷார்த்தமாவது ஸ்வயமே பிரயோஜனமாயுள்ளது. கௌண புருஷார்த்தமாவது வேறொரு பிரயோஜனத்துக்கு ஸாதனமாயிருப்பதை முன்னிட்டுப் பிரயோ ஜனமாயுள்ளது. உதாஹரணம் பசியின்மை ஸ்வயம் பிரயோஜ னம். ஆஹாரம் அதற்கு ஸாதனமாயிருப்பதால் பிரயோஜனம்.

சுகம் முக்யமாவதும் (ப்ரதானமாவதும்) துக்காபாவம் கௌண மாவதும் (அப்ரதானமாவதும்) எதனாலென்றால் துக்கமிருக்குங் கால் சுகம் ஆத்மஸ்வரூபமேயானதால் நித்யமானதுபற்றி இருந்த பொழுதிலும் பிரகாசிக்காதபடியால் (விளங்காமையினால்) துக்கம் சுகத்தின் அபிவ்யக்திக்கு (விளங்குதலுக்கு) பிரதிபந்தகம்(இடை யூறு) ஆகையால் சுகாபிவியக்திக்கு (சுகம் விளங்குவதற்கு) பிரதி பந்தகமாகிய துக்கத்தின் அபாவமானது (இல்லாமையானது) சேஷமானதால் (காரணமானதால்) கௌண புருஷார்த்தமாம். சுகம் மற்றொன்றுக்குச் சேஷமாகாதபடியால் முக்கிய புருஷார்த் தமாம். சுகம் ஆத்மஸ்வரூபம் என்னும் விஷயம் பிறகு விஸ்தா ரமாய் நிரூபிக்கப்படும்.

சுகம் ஏற்படுங்கால் துக்கமில்லாததால் சுகம் துக்காபாவம் ஆகிய இரண்டும் ஒரே ஸமயத்திலிருக்கும்பொழுது அவ்விரண்டி னுள் ஒன்று பிரதானம் மற்றொன்று அதற்குச் சேஷம் என்பதை எவ்வித யுக்தியைக்கொண்டு நிச்சயம் செய்கிறது. யுக்தியில்லா மல்சுகம் பிரதானம் துக்காபாவம் சேஷம் என்றால் துக்காபாவம் பிரதானம். சுகம் சேஷம் என்றுசொல்ல எவ்வளவுநாழிகை யாகும். एकत्रपक्षपातिनीयुक्तिर्विनिगमना "ஒரு கக்ஷியைசாதிக்கும் யுக்தி விநிகமனை" என்று கூறப்பட்ட விநிகமனையென்னும் யுக்தி யில்லாத வரையில் ஒரு கக்ஷியை ஸ்தாபிப்பது எப்படியென்னும் சங்கைக்கு இது ஸமாதானம். சுகம் துக்காபாவம இரண்டினுள் துக்காபாவம் பிரதானமாயும் அதற்குச் சுகம் சேஷமாயுமிருக்கு மானால் சாஸ்திரங்களினால் விசேஷமாய் நிந்திக்கப்படும் அகம்யா கமனம் என்னும் பரஸ்திரீ ஸம்பந்தத்தினால் உண்டாகும் க்ஷணிக மான சிற்றின்ப சுகத்திற்காகக் காமுகனாகிய புருஷன் எவ்வ ளவோ சரீரசிரமம் தனவிரயம் பிராணபயம் லோகாபவாதம் பரலோகபயம் முதலியதால் உண்டாகும் துக்கங்களை कामातुराणां न भयं न लज्जा "காமாதுரர்களுக்குப் பயம் லஜ்ஜை கிடையா" என்கிறபடி பாராட்டாது பிரவிர்த் திப்பது பொருந்தாது. எனெனில் துக்காபாவமே முக்கிய புருஷார்த்தமாயிருக்குமானால் க்ஷணிகமாகிய சுககாலத்திலுள்ள க்ஷணிகமான துக்காபாவத்தை உத்தேசித்தே அக்காமுகன் ஸமஸ்தமான துக்கங்களையும் பாராட்டாது பிரவர்த்திக்கிறான் என்று சொல்லவேண்டும். அப்பொழுது அவன் க்ஷணிகமான

துக்காபாவத்திற்காக (க்ஷணநேரம் துக்கமில்லாமலிருப்பதற்காக) வெகுகாலம் துக்காபாவத்தை இழந்து துக்கங்களை அனுபவிப்பது உசிதமாகுமா. ஸ்திரீலாபத்தின் நிமித்தமாகப்பல விதமான சிரமங்களை அடையாமலிருந்தால் துக்காபாவத்தை க்ஷணநேரத்தோடு நிற்காமல் வெகுகாலம் அனுபவிக்கலாமல்லவா? ஒரு பைஸா லாபத்திற்காகப் பல ரூபாய்களைச் செலவு செய்வது போல் க்ஷணிக துக்காபாவத்திற்காக வெகுகாலத்திய துக்காபாவத்தை இழப்பது புத்திசாலியின் கார்யமாகுமா?

சுகம் பிரதானம் துக்காபாவம் அதற்குச் சேஷம் என்று ஒப்புக்கொண்டாலும் க்ஷணிகமான சுகத்திற்காக வெகுகாலம் சுகத்துடனிருப்பதை இகழ்ந்து கஷ்டப்படுவது பொருந்தாது தான். ஆகையால் இக்கேள்வி சுகம் முக்ய புருஷார்த்தம் என்று சொல்லும் வாதிக்கும் இருக்கும்பொழுது துக்காபாவம் முக்ய புருஷார்த்தம் என்று சொல்லும் வாதியைமாத்திரம் இக்கேள்வி கேழ்ப்பது உசிதமன்று. இதற்குஸமாதானம் இரண்டு வாதிகளும் சேர்ந்து சொல்லவேண்டியதுதானே

यश्चोभयोस्समो दोषःपरिहारोऽपिवासमः ।
नैकः पर्यनुयोक्तव्यस्तादृगर्थविचारणे ॥

"இரண்டு வாதிகளுக்கும் எந்த விஷயத்தில் தோஷமோ பரிஹாரமோ இரண்டும் பொதுவாய் உளதோ அப்பேர்ப்பட்ட விஷயங்களை விசாரிக்குமிடத்தில் ஒருவரை மற்றவர் அந்த தோஷத்தால் தூஷிப்பதுதகாது" என்றபடி சம்பந்தியும் சம்பந்தியும் சத்திரத்திற்குப்போனால் எச்சுமில்லை பேச்சுமில்லை என்பதுபோல் அல்லவா இருக்கிறது இது என்றால், சுகம் முக்ய புருஷார்த்தம் என்று சொல்லும் வாதிக்கு இந்த தோஷம் வாராது. ஏனெனில் கடம் படம் முதலிய பாபவஸ்துவிற்கு உயர்வு தாழ்வு உண்டானபடியால் சுகமும் அவ்விதம் பாபவஸ்துவானதால் வெகுகாலம் கஷ்டப்படாமலிருந்தால் அனுபவிக்கப்படும் சுகங்களைவிட அவ்விதம் கஷ்டப்பட்டு க்ஷணநேரம் அனுபவிக்கப்படும் சுகவிசேஷத்தில் அக்காமுகனுக்கு இது ரொம்பவும் உயர்ந்ததான சுகம் என்னும் தோற்றத்தினால் க்ஷணநேரமாவது அவ்வுயர்ந்த சுகத்தின் அனுபவத்திற்காக அல்பமான சுகங்களை இழந்து அவன் வெகுகாலம் கஷ்டப்படுவது பொருத்தமே. இதுபோல் துக்காபாவம் முக்ய

புருஷார்த்தம் என்றுசொல்லும் வாதிக்கு வெகுகாலம் கஷ்டப் படாமலிருந்தால் அனுபவிக்கப்படும் துக்காபாவங்களைவிட அவ் விதம் கஷ்டப்பட்டு க்ஷணநேரம் அனுபவிக்கப்படும் துக்காபாவ விசேஷத்தில் இது ரொம்பவும் உயர்ந்த துக்காபாவம் என்னும் தோற்றத்தினால் க்ஷணநேரமாவது அவ்வுயர்ந்த துக்காபாவத் தின் அனுபவத்திற்காக அல்ப்பமான துக்காபாவங்களை இழந்து காமுகன் வெகுகாலம் கஷ்டப்படுவது பொருத்தமென்று சொல்ல முடியாது. ஏனெனில் அபாவ வஸ்துக்களில் உயர்வு தாழ்வு முதலிய தர்மங்களின் இருப்பிடமாயிருக்குந்தன்மை கிடையாது. இந்த இல்லாமையைவிட அந்த இல்லாமை மேலா னது என்று லோகானுபவத்திலும் காண்பாரில்லை. இந்த வஸ்தி ரம் ஆபரணம் முதலியதைவிட அந்த வஸ்திரம் ஆபரணம் முதலி யது மேலானது என்றுபாவவஸ்துக்களிலேதான் உயர்வுதாழ்வை லோகானுபவத்தில் காண்கிறோம்.

துக்காபாவத்தில் ஸ்வயமாய் உயர்வு தாழ்வு இல்லாமல் போனாலும் அதன் பிரதியோகியாய் (பிரதி ஸம்பந்தியாய்) விரோதி யாயுள்ள துக்கம் என்னும் பாவவஸ்துவிற்கு உயர்வு தாழ்வு உண்டானபடியால் அதை முன்னிட்டு அதிலுள்ள உயர்வு தாழ் வுகளை அதன் அபாவமாகிய துக்காபாவத்திலும் ஆரோபித்து அதனால் உயர்ந்த துக்காபாவத்திற்காகச் சிரமப்படுவது பொருத் தந்தானென்று சொல்வார்களானால் அவர்களைநாம் இவ்விதம் கேழ்ப்போம். காமுகனால் உயர்ந்ததென்று கருதப்படும் க்ஷணி கமான துக்காபாவத்தின் விரோதியாகிய துக்கம்யாது, அக்கா முகன் தனக்கு இஷ்டமான ஸ்திரீ என்னும் வஸ்துவின் லாபத் திற்கு முன் அதற்காகச் சிரமப்படாமலிருந்தால் எவ்விதமான துக்கங்கள் இல்லாமலிருக்குமோ, அதேவிதமான துக்கந்தானென் றால் அப்பொழுது க்ஷணிகமாகிய துக்காபாவத்தின் பிரதியோகி யாகிய துக்கமும் அதற்குமுன் இழந்த துக்காபாவங்களின் பிரதியோகிகளாகிய துக்கங்களும் ஒரேவிதமாயிருப்பதால் எப்படி அதன் உயர்வு தாழ்வு மூலமாய் அபாவத்திற்கு உயர்வு தாழ்வு கூறமுடியும். அப்படிக் கூறமுடியாமலிருக்கும்பொழுது ஒரே விதமான துக்காபாவங்களில் வெகுகாலம் நீடித்ததான துக்காபா வத்தைக் கைவிடாமல் காமுகன் சிரமப்படாமலிருப்பதுதானே யுக்தமாய் முடியும். அல்லது காமுகன் இஷ்டவஸ்துவின் லாபத்

திற்குமுன் அதற்காக அனுபவிக்கும் துக்கங்களைவிட இஷ்டவஸ்து கிடைக்காததினாலுண்டாகும் துக்கம் ரொம்பவும் ஸஹிக்க முடியாததாதலால் அந்த இஷ்டவஸ்துவின் லாபத்தால் அந்த துக்கம் நீங்குவதாகிய துக்காபாவமானது ஸஹிக்கக்கூடிய முன் துக்கங்களின் அபாவங்களைவிட உயர்ந்தது என்று சொன்னால் அதுவும் பொருந்தாது. ஏனெனில் ஸ்திரீ முதலிய இஷ்டவஸ்துவானது ஸ்வயமே பிரயோஜனமாயுள்ளதன்று. அதனால் ஏற்படும் சுகமோ அல்லது துக்காபாவமோ இரண்டிற்குள் ஒன்றைத்தான் ஸ்வயம் பிரயோஜனமாகக் கூறல்வேண்டும். ஸ்திரீயின் அலாபத்தின் மூலம் அந்தப் பிரயோஜனம் கிடைக்காததை முன்னிட்டுத்தான், அக்காமுகனுக்குத் துக்கம் ஸஹிக்கமுடியாமலிருப்பதாய் ஒப்புக்கொள்ளல்வேண்டும். அப்பொழுது ஸ்திரீயின் அலாபத்தால் ஏற்படும் கடுமையான துக்கத்தின் இல்லாமையே ஸ்திரீ லாபத்திற்குப் பிரயோஜனமெனக்கருதினால் மற்ற அனாவச்யகமான வஸ்துக்களின் அலாபத்தில் துக்கம் வராமல் ஸ்திரீயின் அலாபத்தில்மாத்திரம் துக்கம் வருவதற்குக்காரணம் என்னவென்று சொல்லவேண்டும். மற்ற வஸ்துக்களின் லாபத்தில் விசேஷமான பிரயோஜனம் இல்லாததால் அதன் அலாபத்தில் அவ்வளவு துக்கம் இல்லையென்றால் அதுவும் பொருந்தாது. ஏனென்றால் இவ்விதம் இஷ்ட வஸ்துவின் லாபத்திற்குப் பிரயோஜனம் கூறினால் அன்யோன்யாச்ரயதோஷம் (இரண்டு வஸ்துக்கள் ஒன்றையொன்று ஆச்ரயித்து இரண்டும் ஸித்திக்காமல் போவதாகியதோஷம்) வரும். எவ்விதமென்றால் ஒருவன் நதியில் ஸ்நானம் செய்துவிட்டு மறைதியினால் அவ்விடத்தில் சொம்பையும் மடிஸஞ்சிகையும் வைத்துவிட்டு கிருஹம் வந்தபின் அதை எடுத்துவரும்படி மற்றொருவனை ஏவுங்கால் அவன் சொம்பை எங்கு வைத்தீர்கள் என்று வினவ அதற்கு மடிஸஞ்சிகை வைத்தவிடத்தில் என்று விடையளித்து மறுபடியும் அவன் மடிஸஞ்சிகையை எங்கு வைத்தீர்கள் என்றுவினவ அதற்குச் சொம்பை வைத்த விடத்தில் என்று விடையளித்தால் அவ்விடை எவ்விதம் வினாச்செய்தவனுக்குப் போதத்தை (அறிவை) உண்டுபண்ணாது பலனற்றதாய் முடியுமோ அவ்விதமே இவ்விடத்திலும் ஒரு வஸ்து இஷ்டமாயிருந்தால் அது கிடைக்காததால் துக்கம் ஏற்பட்டு அதன் அபாவம் அவ்விஷ்ட வஸ்துவின் லாபத்திற்குப் பிரயோஜனமாய் முடியும், அவ்வித துக்கத்தின் அபாவமாகிய

பிரயோஜனமிருந்தால் மற்ற அனுவச்யகமான வஸ்துக்களைப்போலாகாது. அந்த வஸ்து இஷ்டமாய் முடியும். இவ்வாறு வஸ்து இஷ்டமாவதும் அந்த வஸ்துவின் அலாபத்திலுண்டாகும் துக்கத்தின் இல்லாமை அதற்குப் பிரயோஜனமாவதும்தான் ஸித்திப்பதற்காக ஒன்றை மற்றொன்று மாறிமாறிப்பற்றிக்கொண்டு அன்யோன்யாச்ரய தோஷத்தால் ஒன்றுமே சித்திக்காமல் அபோதத்தில் (அறியாமையில்) பர்யவஸானமாகின்றபடியால் அது பொருந்தாது. ஆகையால் ஸ்திரீயின் லாபத்தால் ஏற்படும். உயர்ந்த சுகமாகிய பிரயோஜனம் அதன் அலாபத்தில் கிடைக்காததால் அக்காமுகனுக்கு ஸஹிக்கமுடியாத துக்கம் ஏற்பட்டதென்றும் அந்த சுகமே அதற்குப் பிரயோஜனமென்றும் அந்த உயர்ந்த சுகம் முன் இழந்த சுகங்களைவிட மேலானதென்றும் அதற்காகவே காமுகன் வெகுபாடு படுகிறான்என்றும் ஆகையினால் சுகமே முக்ய புருஷார்த்தம் துக்காபாவம் அதற்குச் சேஷமாய்க் கௌண புருஷார்த்தமென்றும், வேறு வழியில்லாததால் ஒப்புக்கொள்ள இஷ்டமில்லாதபோனாலும் ஒப்புக்கொள்ளவேண்டியே வருகிறதென்பது இதுகாறும் கூறியவாற்றால் முடிந்த முடிப்பு. இவ்வித உயர்ந்த ஸித்தாந்தமானது ஸ்ரீமத் சித்ஸுகாசார்யாள் அவர்களால் தத்துவப் பிரதீபிகை என்னும் சிறந்த கிரந்தத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த ஸித்தாந்தம் ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்திரர்களால் ஸித்தாந்தலேச ஸங்கிரஹம் என்னும் அத்யுத்தமமான கிரந்தத்திலும் நான்காவது பரிச்சேதத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

மேலும் துக்காபாவமே முக்ய புருஷார்த்தமாகுமானால் பாராங்கல் குட்டிச்சுவர் முதலிய ஜடவஸ்துக்களுக்கும் துக்காபாவம் இயற்கையாயிருப்பதால் அத்தன்மையே எல்லோராலும் வேண்டப்படவேண்டும். துக்கம் கொஞ்சகாலம் இருந்து பிறகு துக்கமில்லாமலிருப்பதே புருஷார்த்தம். அப்படிக்கல் முதலியது இல்லாதபடியால் அத்தன்மை வேண்டப்படுவதில்லையென்றால் கெர்ப்ப ஸ்ரீமான்களாய்ப் பிறந்ததுமுதல் துக்கத்தையே அனுபவிக்காதவர்களாயுள்ள மஹாராஜ குமாரர்களாய்ப்பிறப்பது வேண்டப்படாததாகவே வேண்டும். ஆகையால் பாராங்கல் முதலியதில் இல்லாத சுகமே முக்ய புருஷார்த்தம் என்பது அசைக்கமுடியாத ஸித்தாந்தம்.

சுகம் புருஷர்கள் ஸ்திரீகள் இரண்டுபேர்களாலும் ஆசைப் படக்கூடிய விஷயமாயிருக்க ஸ்திரியர்த்தம் என்று சொல்லாது புருஷார்த்தம் என்று பெயரிட்டதின் காரணமென்னவென்றால் ஸ்திரீகளுக்கு ஸ்வாதந்திரியம் ஒருபொழுதும் கிடையாது. அவர்களுக்குப் பருஷபாரதந்திரியந்தான் உள்ளது என்பதைக் காட்டவே அப்பெயர். இதன் விளக்கம் ஸ்திரீ ஸ்வாதந்திரிய நிராகரணமென்னும் மற்றொரு உபந்யாஸத்தில் பிரசுரிக்கப்படுமானதால் அதை இங்கு விடுத்தனம்.

(தொடரும்) போலகம், ஸ்ரீராமசாஸ்திரி.

---

## கும்பகோணம் த்வைதாத்வைத விசார ஸபா.

இப்பவும் ஷை தலைப்பெயருடன் ஸ்ரீ உத்திராதிமடம் ஸ்வாமிகள் அவர்களது பிரேரேபணையால் நடைபெற்ற விசார ஸபையின் விபரங்கள்.

17—3—1931 முதல்நாள் நடவடிக்கை:--கீதை, ப்ரம்ம ஸூத்திரம், உபநிஷத்துக்கள் இவைகளில் தனித்தனியாகவும், எல்லாம் ஏகவாக்யதாரூபமாக த்வைதத்தைத் தெரிவிக்கின்றதா? அல்லது அத்வைதத்தைப் புகட்டுகின்றதா? என்பது விசார விஷயம். இருதரப்பாரும் அநுஷ்டிக்கவேண்டிய விதிகள் தீர்மானிக்கப்பட்டு தினந்தோறும் இரவு 6.30 முதல் 8-30 வரை ஸபை நடக்கவேண்டுமென நிச்சயிக்கப்பட்டது.

18—3—31 இந்தஸபைக்கு ஸ்ரீ உத்திராதிமடம் ஸ்வாமிகள் ப்ரொபஸர் K. சுந்தரராமய்யர், ரகுநாதராவ், G. V, வேங்கடராமய்யர் முதலான பிரமுகர்களும் கல்கத்தா M. M. அனந்தகிருஷ்ணசாஸ்திரிகள், சிதம்பரம் M. M. தண்டபாணிஸ்வாமி தீக்ஷிதர், நாகராஜ சர்மா, யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் முதலான பண்டித சிரேஷ்டர்களும் விஜயம்செய்தார்கள். ப்ரம்மஸ்ரீ யக்ஞஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களுடைய ஆரம்ப பிரசங்கம்.

தத்வவிசாரம் செய்வதற்காக இந்த ஸமாஜம் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டபோதிலும் இதன் உண்மையான நோக்கம் தத்வவிசாரம் என்று காணப்படவில்லை. ஸ்ரீ உத்திராதிமடம் ஸ்வாமிகள் அத்வைதம் அவைதிகம் என்று பத்திரி

கைகளில் பிரகடனப்படுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது. வர்ணாச்ரம தர்மமும் உலக சமாதானமும் தலைகீழாகப் பிறண்டு வரும் இத்தருணத்திலே, சங்கரபகவத்பாதாளுடையஸித்தாந்தமாகிய அத்வைதத்தை அவைதிகமென பிரசாரம் செய்துவருவதன் காரணம் என்னால் அறியக்கூடவில்லை. தர்மங்களும் ஆசாரங்களும் மலினமடைந்துவரும் தருவாயில் அவைகளை உத்தாரணம் செய்ய முயற்சிக்கவேண்டியது அவசியமாயிருக்க கேவலம் த்வேஷத்தை ஆதாரமாகக்கொண்டு நமக்குள்ளேயே பகைமையையும் வருத்தத்தையும் உண்டுபண்ணுவதாக இது இருக்கிறது. நித்யானந்த ஞானஸ்வரூபமாகிய அத்வைதாத்மஸாக்ஷாத்கார பாவத்தை எவன் ஸந்தேஹப்படுகிறானோ அவன் நாசத்தை அடைகிறான்.

தற்சமயம் ஆரம்பித்த காரியத்தின் நோக்கம் தத்வவிசாரம் என்று சொல்லப்பட்டபோதிலும் அது வாஸ்தவமான காரணமாக இருப்பதாகச் சொல்லமுடியாது. ஸ்ரீ ஸ்வாமிகள் இதை ஒருக்கால் மறுத்தாலும் அத்வைதம் அவைதிகம் என்று அவர் பேரால் பஹிரங்கப்படுத்தப்பட்டிருப்பதை உலகமே புகழும் ஸ்ரீ ஸ்வாமிகள் தத்வவிசாரத்திற்காகவா இந்த ஸபையை கூட்டியிருக்கிறார்? உண்மையில் அவ்விதம் இருக்குமானால் தத்வத்தை தெரிந்துகொள்ள விரும்புகிறவர் ஆச்ரயிக்கவேண்டிய முறைகள் அனுஷ்டிக்கப்பட்டதாகத் தோன்றவில்லை. மேலும் ஸ்ரீஸ்வாமிகள் தத்வத்தை தெரிந்துகொண்டிருந்தால் இத்தகைய சபை ஒன்றை கூட்டுவதற்கு அவசியமேயில்லை. ஒருக்கால் தத்வத்தைப் போதிப்பது நோக்கமாக இருந்தால் சம்சயங்கள் ஏற்படாத எங்களுக்கு தெரிந்துகொள்ளவேண்டியது ஒன்றுமில்லை என்பதை விசதப்படுத்துகிறோம்.

ஒருவாறு சபை கூட்டப்பட்டுவிட்டது. இப்பொழுது அத்வைதம் அவைதிகம் என்று ஒருவர் சொல்வதை நாங்கள் கேட்டுக்கொண்டிருக்கமுடியாது. அத்வைதம் அவைதிகமென்று கூறியது முற்றிலும் தவறானது என்பதை ஸ்தாபிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். மற்றவர் நம் மதத்தைத் தூஷிப்பதை ஸஹிக்கமுடியாது. அவசியமானால் மதத்தை ஸ்தாபிப்பதற்காக உயிரையும்விட தயாராக இருக்கிறோம். எவர் வேண்டுமானாலும் அத்வைதம் அவைதிகமென வாதிக்க முன்வரலாம். அத்வை

தம் அவைதிகம் அல்ல என்றும் வைதிகமே என்றும் நிலைநாட்ட நாங்கள் முன்வருகின்றோம். இவ்வளவுக்கும் மூலகாரணமாயிருப்பவர் சரியான சமாதானம் சொல்லக்கடமைப்பட்டிருக்கிறார். கன்னியாகுமரி முதல் ஹிமயமலை வரையிலுள்ள பண்டிதர்களும் இந்தியா முழுவதுமே இத்தகைய அவமானத்தையுண்டுபண்ணும் வார்த்தையைத் தாளமுடியாமல் திரண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். மிகவும் கேவலமானமுறையில் அசம்பாவிதமான பிரசாரம் செய்துவருவது வெறுக்கத்தக்கது. யாவரும் பரமச்ரேயஸ்கரமான தூயமார்க்கங்களில் ஈடுபட்டு மேன்மேலும் க்ஷேமத்தை அடைய முயற்சிப்பார்களாக.

---

# ஸ்ரீ பிராப்தி
# அல்லது பொருளடைதல்.

உலகத்தில் யாவராலும் விரும்பக்கூடியது ஸ்ரீயே. இந்த ஸ்ரீயென்பது போகஸ்ரீயென்றும் மோக்ஷஸ்ரீயென்றுமிருவகைப்பட்டது. மோக்ஷஸ்ரீயென்பது ஸுலபத்தில் அடையக்கூடியதல்ல. அநேகம் ஜன்மாக்களையெடுத்து ஈச்வரனுடைய அனுக்ரஹத்தைப்பெற்று பலத்தில் ஆசையை ஒழித்து ஈசனுக்கென்று செய்த புண்யகர்ம வசத்தால் சித்தம் சுத்தியடைந்து ஞானமூலமாக ஆனந்தபிரகாசம் ஏற்படுவதேமோக்ஷஸ்ரீயெனப்படும். போகஸ்ரீயோவென்றால் உலகவாழ்கைக்கு முக்யமான ஸாதனமாயிருப்பதோடு விதிப்படி அதை ஸம்பாதித்து விதிப்படி சிலவும் செய்தால் மேற்கூறிய மோக்ஷஸ்ரீக்கு இதுவும் பரம்பரையாக ஸாதனமாகும். இதையே அர்த்தமென்கிற புருஷார்த்தமாகக் கூறலாம். ஆனால் உலகத்தில் இந்த அர்த்தத்தையடையமுயல்கிறார்களே தவிர எந்த காரணத்தினால் இதையடையலாமென்று காரணத்தை விசாரிப்பவர்களே கிடையாது. ஆனால் பொருளில்லாதவர்களை மிகவும் இகழ்ச்சியாகப் பேசுவது வழக்கம். அர்த்தத்தைப்பற்றி ஒரு சுலோகத்தில்

यस्यार्थास्तस्य मित्राणि यस्यार्थास्तस्य बान्धवाः। यस्यार्थास्स पुमान्लोके ॥

அர்த்தமுள்ளவர்களுக்கே மித்திரர்களும் பந்துக்களும் ஏற்படுகிறார்கள். அவனே மனிதன் என்றும் இப்படி கூறியிருக்கிறது.

ஆகையால் பொருள் ஸம்பாதிப்பது அவச்யமென்றே ஏற்பட்டபோதிலும் அதற்கு வழிதெரியாமல் ஸம்பாதிக்கமுயலுவது கஷ்டத்தையுண்டுபண்ணுகிறது. எந்தக்காரியங்களைச் செய்யவேண்டுமானாலும் தேசம், காலம் அதிர்ஷ்டம் இவைகளை முன்னிட்டுக்கொண்டு நடத்தவேண்டியது அவசியம். இதற்கு திருஷ்டாந்தமாக ஆஹாரத்திற்காக தான்யங்களைச் சேர்க்கவிரும்புகிற ஒரு மனிதன் ஜலம்பாய்ந்து உழவுசெய்து சதும்பலாயுள்ள தேசத்தை விட்டு செவிட்டுமண்ணாயிருக்கும் தேசத்தில் விதைத்தால் அவன் தான் நினைத்த பலனையடையமுடியுமா? அதுபோல மழைக்காலத்தைவிட்டு வேனல்காலத்தில் விதைப்பானாகில் அப்பலனையடைய முடியுமா? அல்லது ஸரியான காலத்திலும் ஸரியான தேசத்திலும் விதைத்து பயிராக்கிவிட்டபோதிலும் அதிர்ஷ்டவசமாக கல்லுமழை பெய்தோ, பூச்சிகளால் வெட்டுப்பட்டோ, தண்ணீரில்லாமல் காய்ந்தோபோய்விட்டால் அந்தப்பலனை அடையமுடியுமா? எந்தக்காரியத்தை எந்தக்காரணத்தைக்கொண்டு அறியலாமோ, அந்தக் காரணத்தை அறிந்துகொள்ளாதவனும் அந்தப் பலனை அடையமுடியாது. கட்டிமாம்பழம் சாப்பிடவிரும்பியவன் வேப்பமரத்தைத்தன் வீட்டில்வைத்து வளர்ப்பானேயானால் அதிலிருந்து ஒருமாம்பழத்தையாவது அடையமுடியாது. ஆகையால் பொருளைச் சம்பாதித்துத்தன் சக்திக்குத்தக்கவாறு நல்ல பாத்திரத்தில் உபயோகப்படுத்தினால் கொஞ்சமேனும் குறைவின்றி விருத்தியடைந்து அந்த ஸ்ரீயானது நிலைத்திருக்கும். அது எப்படியென்றால் ஒருபடி தான்யத்தின் விதையை தேசகால அதிர்ஷ்டங்களை அபேக்ஷித்து வயலில் விதைத்தால் பத்துபடி தான்யத்தை பலமாக அடைகிறான் என்பது யாவரும் அறிந்தவிஷயம். இதுபோலவே திரவியத்தை ஒருமடங்கு தானம்செய்தால் அது பத்துமடங்கு விருத்தியாகுமென்பதில் சந்தேகமில்லை. இதற்குத்தான் நல்வரவாகக்கிடைத்த திரவ்யமென்று கூறப்படுகிறது. இப்படிப்பட்டவனிடத்தில்தான் ஸ்ரீதேவியானவள் நிலைபெற்று வசிப்பேனென்று கூறியிருக்கிறாள். இந்த ஸ்ரீயை அடைவதற்கு நிர்ப்பந்தமாக சில நியமங்கள் கூறியிருப்பதை இங்கு எழுதுகிறேன். ருக்மணீ தேவியானவள் ஸ்ரீதேவியைப்பார்த்து நீ எவ்வெந்த விடத்தில் நிலைத்து வாஸம் செய்வாயென்றுகேட்க அவள் கூறியதாவது அழகுள்ளவனிடத்திலும், படுவாயிருப்பவனிடத்திலும், தைரியமுள்ளவனிடத்திலும், கர்மானுஷ்டானம் செய்பவ

ளிடத்திலும், கோபமில்லாதவனிடத்திலும், தேவகாரியங்களை நடத்துகிறவனிடத்திலும், செய்நன்றி மறவாதவனிடத்திலும், இந்திரியஜெயம் செய்தவனிடத்திலும், நிலைத்து வாசம் செய்வேன். கர்மத்தை விட்டவனிடத்திலும், நாஸ்திகனிடத்திலும் சண்டைசெய்பவனிடத்திலும், உபகாரத்தை மறந்தவனிடத்திலும், கெட்டநடத்தையுள்ளவனிடத்திலும், திருட்டுத்தனமுள்ளவனிடத்திலும், குருதுவேஷியிடத்திலும், அல்பமானதேஜஸ்ஸை அடைந்தவனிடத்திலும், எக்காரியங்களிலும் கோபமடைபவனிடத்திலும், தனக்கு கிடைக்காதவஸ்துவை ஆசைகொள்பவனிடத்திலும் வஸிக்கமாட்டேன். தனக்காக ஒருபதார்த்தத்திலும் ஆசையில்லாதவனிடத்திலும், மனக்கவலை அடைந்தவனிடத்திலும், அல்ப சந்தோஷியாயிருப்பவனிடத்திலும் வஸிக்கமாட்டேன். தனது வர்ணம் ஆசிரமம் இவைகளுக்குரிய தர்மங்களை அனுஷ்டிப்பவனிடத்திலும், தர்மங்களை அறிந்தவர்களிடத்திலும், பெரியோர்களை ஸேவிப்பவனிடத்திலும், மனதைக்கட்டியவனிடத்திலும், பொருமையுள்ளவனிடத்திலும் வசிப்பேன். பெருமையுள்ள ஸ்திரீகளிடத்திலும், உண்மைபேசுகிறவர்களிடத்திலும், நேர்வழியாக நடப்பவர்களிடத்திலும், தேவர்கள் பிராம்மணர்கள் இவர்களை பூஜிப்பவர்களிடத்திலும் இப்படிப்பட்ட ஸ்திரீகளிடத்தில் வாஸம் செய்வேன். வீட்டிலுள்ள பாண்டங்களை உடைப்பவளிடத்திலும், நிதானமில்லாமல் காரியங்கள் செய்பவளிடத்திலும் கணவனுக்கு எதிரியான காரியங்களை செய்பவளிடத்திலும் பிறர்வீட்டுக்கு அடிக்கடி செல்பவளிடத்திலும் லஜ்ஜையில்லாதவளிடத்திலும் நான் வசிக்கமாட்டேன். அவர்களைத்தள்ளும்படி செய்துவிடுவேன்.

(தொடரும்) கச்சபேசுவரசாஸ்திரிகள்.

# வார விருத்தாந்தம்.

சோற்படி நடப்பரா? காரச்சியில் 30உ காங்க்ரஸ் நிர்வாஹ ஸபையார் தங்களிடம் வந்தால் ராஜ்யம் எப்படி நடத்தப்படுமென சில தீர்மானங்களை வெளியிட்டிருக்கின்றனர். அதில் ராஜாங்கம் மதவிஷயத்தில் நடுநிலைமை வஹிக்குமென்பதொன்று. இதே ஆஸ்திகர்களது கோரிக்கை. ஆனல் அவர்கள் இதற்கு செய்யும்

வியாக்யாநம் விசித்ரமானது. விவாஹம் மதவிஷயமில்லை என்பது அவர்கள் கொள்கை. மேனாட்டு வாஸனையகன்றாலன்றி இவர்களுக்கு உண்மைவிஷயம் விளங்காது. இவர்களது கண்ணில் இது மதமாகக் காணாவிடினும் மதமெனக் கருதுவோரது எண்ணத்தில் இவர்கள் மதிப்பு வைப்பார்களா? ஆனால் சாரதாசட்ட வயதை 14லிருந்து 19 ஆக்கவேண்டுமென்று கொடுத்த தந்தியைத் திரும்பப்பெற்று இச்சட்டத்தை ஒழிக்க இவர்கள் முன்வரவேண்டும்.

சித்தந்தெளியவில்லை.பொதுக்கிணறுகள் வீதி ஸ்தலம் இவைகளில் எல்லோருக்கும் உறிமையுண்டென காங்க்ரஸ் தீர்மானித்தது புதிதல்ல. இதற்கு வியாக்யானங் கூறுகையில் இதில் கோவிலும் சேருமென கூறப்படுகிறது. எக்காரணம்பற்றி முன்னோர்கள் இக்கட்டுப்பாட்டை ஏற்படுத்தினர் என அறியவேண்டின் நமது நாட்டுக்கல்விகற்று கர்மாநுஷ்டானங்களைச்செய்து சித்தம் தெளிவுபெறவேண்டும். மதத்தில் தலையிடுவதில்லை என்ற முன்னுக்கு விரோதமாக எங்கும் எல்லோரும் செல்லலாமென பின் விரோதமாயிருப்பதுகூட தெளியாச்சித்தமுள்ள தேசியத் தலைவர்களுக்குத் தோன்றவில்லை. நம் நாட்டுக் கலைகளில் சிறந்த மேதாவிகளைக்கொண்டு நன்கு விசாரித்தபின்பேனும் முடிவிற்கு வரலாகாதோ?

கண்டேனும் கற்காரோ ? தேசீயஸபை நடக்கும்போது ஸந்தியாகாலத்தில் எல்லா மஹம்மதியர்களும் தொழுகைக்குச் செல்கின்றனர். நம்மவர் அச்சமயம் சோடா வெத்திலைபாக்கு ஸேவிக்கின்றனர். மதநம்பிக்கையால்தான் எண்ணிக்கையில் குறைந்தவராயினும் கார்யத்தில் நிறைந்து காணப்படுகின்றனர் மஹமதியர். இதைக்கண்டாவது நல்லது வாராதோ?

மதக்கல்வியில்லாக்குறை-கான்பூரில்தேசீயக்கிளர்ச்சிஜாதிச் சண்டையாக மாறிற்று. 1500-மனிதர் இறந்தனர். 50-லக்ஷம் ரூபாய் நஷ்டம். கணேச சங்கர வித்யார்த்தி என்ற வீரர் பல மஹம்மதியர்களைக் காத்து தன் தலையை அவர்களிடமே கொடுத்து ஈட்டியால் 20-குத்து பெற்று வீழ்ந்தார். இவ்வீரச்செயல் வீணாகாது. ஆயினும் கல்வியில்லா மஹாமூடர்களைத் திருத்த நன்கு மதக்கல்வி ஊட்டவேண்டும். பிறருக்குச் செய்யும் சிறிய ஹிம்சையும்தனக்குபோபத்தாகமுடியுமெனஉணர்த்தவேண்டும்.

இஃதென்ன அறியாமை:- 29உ போடி ஜமீன்தார் ஜல்லிக் கட்டுவிழா நடத்தினாராம். கொழுத்த காளையை வெட்டி முரட்டு மனிதனைக்கொண்டு பிடிக்கச் சொல்வதாம் இது. இச்செயல் இஹத்திற்குமில்லை பரத்திற்குமில்லை. இதைக்காண 50-ஆயிரம் ஜனக்கூட்டம். மூன்றுபேரைக் காளைக் குத்திக்கொன்றது. இக் கேளியில் களிகொண்ட ஜமீன்தாருக்கும் அந்த ஜனங்களுக்கும் நல்வழியில் செல்ல நற்புத்தியளிக்க இறைவனை வேண்டுகிறோம்.

இவரன்றோ தீரர்.- கான்பூர்கலகத்தில் மஹம்மதியரே அதிக நஷ்டமடைந்ததாகக் கூறி முன் பின் யோசியாத பிடிவாதக்கார துலுக்கர்கூட்டத்தில்ஓர் துலுக்க சப்இன்ஸ்பெக்டர் பிரசாரம்செய் தாராம். இச்செயலுக்கு இவரது அறியாமை காரணமா அல்லது திரைமறைவில் நின்று ஸ்வகாரியத்திற்காக எவராகிலும் ஆட்டி வைக்கிறாரோ அறியேம். ஜனாப் அப்துல்காஸிம் என்ற அதே வகுப்பைச் சேர்ந்த நண்பர் கண்மூடித்தனமாக நம் ஜாதியென்ற அபிமானத்தால் ஷை அக்ரமச் செயலை ஆதரிக்காமல் மாஜிஸ்ட் ரேட்டுக்கும் போலீஸ் அதிகாரிகளுக்கும் இன்ஸ்பெக்டர்மேல் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி அறிவித்திருக்கிறார். இவரது தீரச்செயலைக் கண்டு எவர்தான்சந்தோஷிக்காமலிருப்பர்

ஸ்வயம் நஷ்ட: பரான் நாசயதி— தான்கெட்டவன் பிற ரையும் கெடுப்பான் என ஓர் பழமொழியுண்டு. சேதபக்திஎனக் கூறி அச்சம் நாணம் அடக்கம் பாதிவ்ரதயம் முதலியவைகளை விட்டு பெண்மக்கள் வெளிக்கிளம்புவதும் உபன்யஸிப்பதும் மறி யல்செய்வதும் நம் நாட்டிற்கு தகாதகார்யம். நாட்டுவழக்கத்தை விட்டு நாட்டைக் காப்பதாகக்கூறி வெளிவந்த பெண்கள் விராம காலங்களில் தங்களுடன் சேர்ந்துழைக்க கலாசாலை மாணவர்களை பஹிரங்கமாக அழைக்கின்றனர். இஃதென்ன அநீதி? அக்னி கும்ப ஸமம்நாரீ. நெய்க்கும்பத்திற்கு ஸமம் புருஷன். இது ஒன்றுசேரல் ஆபத்தன்றோ? சபர்மதி ஆச்ரமத்தில் இருவகுப் பையுமொன்றுசேர்த்து அதனால்வந்த அநர்த்தத்தைக்கண்டு ஐந் தாறுநாள் பட்டினிகிடந்தார் தலைவர்.

ஸதாசாரமே மருந்து:—திருநெல்வேலியில் 4உ சுயமரியாதை என்ற பெயரால் நாஸ்திக வியாதி பரவி பற்பல சொல்லொணாத் துன்பங்களை விளைவித்தது. நாளுக்குநாள் இதன்வேகம் அதிக மாக பரவிவருகிறது. அந்த்யகாலத்தில் காயத்ரி சொன்னதற்கா

நேருவையும் கர்மம்செய்ததற்காகஅவர்பிள்ளையையும்வர்ணாச்ரமம் மேலானதென்றதற்காக காந்தியையும் தாக்குகிறது. அவர்களே இந்தப்பாடுபட்டாரெனில் வைதிகரைப்பற்றி கேட்கவும் வேண்டுமா? எல்லா மதமும் அழியவேண்டுமாம். பெண்கள் அடுப்பூதுவதை விடவேண்டுமாம். இதுபோன்றவை இப்பிணியின் விலாஸம். இன்னும் எவ்வளவோ நாம் கண்ணால் காணப்போகிறோம். ஆஸ்திகர்கள் செய்யவேண்டியது எப்பலனையும் எதிர்பாராது புராணாதிப்பரவசநமூலம் ப்ரசாரம் செய்துவருவதுடன் தாங்களும் ஸதாசாரத்தைக் கைப்பற்றல் தக்கமருந்தாம்.

அரசனைநம்பி புருஷனை விடாதீர்:—ஸ்வதர்மமே எப்படி இருந்தாலும் சிறந்ததென கீதை கூறுகிறது. தங்களைத் தாழ்த்தியாக பஞ்சமர்கள் கூறுவதற்குள் அவர்களை மேலே தூக்கிவிடுவதாக வந்த தர்ம கர்த்தாக்கள் கூற்று எங்கும் செவிடு படுகிறது. இதை நம்பியும் தேனொழுக பாதிரிமார்கள் சொல்வதையும்கேட்டு பலர் கிருஸ்துவாக மாறுகின்றனர். இவர்கள் உத்தேசம் கர்த்தனளிக்கும் மோக்ஷமல்ல. உத்தியோகமும் எங்கும் செல்லலாம், பணம் கிடைக்குமென்றெண்ணமே. மேல் ஜாதி கிருஸ்துவர்களே இவர்களை ஸரியாக நடத்துவதில்லையென திண்டுக்கல்லிலுள்ள கிருஸ்துவர்கள் கவர்னருக்கு ஓர் மஹஜர் அனுப்பியிருக்கின்றனர். ஐயோ பாவம்! இத்திருசங்குகளுக்கு இறங்குகிறோம். தன் தேவதையைவிட்டு அன்யனை ஆச்ரயித்தால் தன் தைவமும் விடும். அன்யதேவனும் அருள்புரியான் என்பது வேதவாக்கு. இதனுட்பொருளை அவர்களுக்கு எவர் எப்படி எடுத்துரைப்பார் ?

ஆசார்யனே சரணம்:—அக்ஞான இருளையகற்றிக்ஞான ஒளியால் பேரானந்தத்தைப்பெறும் வழியைவிளக்கிய ஸ்ரீ கைலாஸநாதன் அவனியில் ஆசார்யனாக அவதரித்த திநம் நாளது சித்திரைமீ 10வ குருவாரமாகும். இம்மதத்தைத் தழுவியவர் ஒவ்வொரு வீட்டிலும் ஆசார்யாது படத்திற்கு அர்ச்சனையும் அன்னவரெதிரில் ருத்ர சமக உபநிஷத் பாராயணமும் கிடைத்தால் அன்னவாது அமிர்த மொழியான உபதேசத்தைக் கேட்டால் இவைகளையேனும் குறைந்தபக்ஷம் அநுஷ்டித்தால் இஹபர சுகமுண்டென சொல்லாமலே விளங்கும்.

ஸ்ரீவத்ஸ வே, ஸோமதேவ சர்மா